**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ம் நாள் புதன்கிழமை**

**I.A.No.01/2023**
**in**
**O.S.No.71/2019**

கருணாநிதி
(வைஷ வாதிக்கு பவர் ஏஜெண்டும் சகோதரருமான
ரத்தினவேல்பாண்டியன் மூலம்)

...மனுதாரர்/வாதி

/எதிர்/

முத்துரத்தினம் வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 14.02.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரை வாதியின் Power of attorney ஆக அங்கீகாரம் செய்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர் வாதியின் பவர் ஏஜெண்ட் என்றும், வழக்கின் வாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், தொழில் நிமிர்த்தமான வெளி மாவட்டத்தில் வேலை செய்து வருவதாலும், தாவா சொத்தை வாதிக்காக சகோதரர் என்ற முறையில் மனுதாரர் மேற்பார்வை செய்து வருவதாகவும், தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யவும், பவர் பத்திரத்தின் அசலை மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும்,

மனுதாரரை வாதியின் பவர் ஏஜென்டாக நியமனம் செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

அசல் வழக்கில் வாதிக்கு உடல்நிலை சரியில்லாததாலும், தொழில் நிமிர்த்தமாக வெளி மாவட்டத்தில் தங்கி வேலை பார்த்து வருவதாலும், இம்மனுதாரர் அவரது சகோதரர் என்ற அடிப்படையில் பவர் ஏஜெண்டாக வழக்கினை நடத்திட அனுமதி வழங்கிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. வேறு ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படவில்லை.

மனுதாரர் வாதியின் சகோதரர் என்ற அடிப்படையில் வாதிக்கு பதிலாக பவர் ஏஜென்ட் என்ற முறையில் வழக்கினை நடத்திட வாதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரம் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மனுதாரர் பவர் ஏஜென்ட் அடிப்படையில் வழக்கினை மேற்கொண்டு நடத்திட வாதி அவருக்கு அனுமதி வழங்கியுள்ள விபரம் தெரிய வருகிறது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 28.02.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.02.28 15:10:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:**

இல்லை.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.02.28 15:10:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2023
in
O.S.No.71/2019

Date:28.02.2024
IA order